மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஹட்கோ கடன் மூலமாக 15400 ரூபாய் வழங்கப்படுகிறது. மத்திய அரசு மானியமாக 14000 ரூபாயும் மாநில அரசு 5000 ரூபாயும் வழங்குகின்றன. இப்போது இதை ஏற்றித் தருவது என்பதைப் பொறுத்தவரையில் மத்திய அரசுதான் செய்யவேண்டும். ஆகவே மத்திய அரசோடு இதைப்பற்றிக் கலந்து பேசி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்திரவின்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய-மாநில நெசவாளர்கள் மாதிரி கிராமம் என்கிற ஒரு திட்டத்தின் கீழ் எனது தொகுதியில் உள்ள விளாகம் என்ற கிராமத்தை எடுத்திருக்கிறார்கள். நெசவாளர்களுக்காகக் குடியிருப்புக் கட்டடம் கட்டுவதற்காகவும், நெசவாளர்கள் சங்கம் கட்டுவதற்காகவும் இடத்தைக் கையகப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் கிராம வளர்ச்சி என்கிற காரணத்தைக் காட்டி கிராமத்தில் இருக்கின்ற சிலர் இதை தடை செய்கிறார்கள். எனவே அரசு இந்த இடங்களை மீண்டும் பெற்று இந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தில் இருக்கின்ற பொதுமக்கள் முழுமையாக ஒன்றை எதிர்த்தால் அதற்கு எதிராக ஒன்றைச் செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரும்ப மாட்டார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கிற கோரிக்கையைப் பரிசீலித்து அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 194, திரு. சி. ஞானசேகரன் இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. ஓ. எஸ். அமர்நாத் கேட்கிறார். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

194—

மாவட்டந்தோறும் திரைப்படக் கல்லூரி துவங்குதல்

***40025—திரு. சி. ஞானசேகரன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 3]

(அ) அரசு குறைந்த செலவில் ஏழை மாணவர்களும் பயிற்சி பெறும் வண்ணம் மாவட்டந்தோறும் திரைப்படக் கல்லூரியைத் துவங்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்துறையிலும் முத்திரை பதிக்கின்ற நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சூழும் பகை என்றாலும் சூறாவளியாக மாறி எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச்செய்கிற திறமை உடையவர்கள். அவர்களுடைய ஆட்சியில் திரைப்படத் துறையில் தனக்கென்று ஒரு சாதனையை தமிழகத்திற்காக ஏற்படுத்தி வெளிநாட்டவர்கள் எல்லாம் வியக்கின்ற வகையில் ஜெ.ஜெ. திரைப்பட நகரை உருவாக்கியுள்ளார்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். சென்னையில் மட்டும் திரைப்படக் கல்லூரி இருக்கிறது. மற்ற மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் இங்கே பயிற்சிபெற வேண்டுமென்றால், சென்னைக்கு வந்து தங்கவேண்டுமென்றால் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். எனவே தமிழகத்தில் உள்ள ஏழை மாணவர்கள் பயன்படுகிற வகையில் தமிழகத்தில் உள்ள பிரதான நகரங்களான மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களிலும் திரைப்படக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழக அரசின் சார்பில், அதாவது மாநில அரசின் சார்பில் ஒரேயொரு திரைப்படக் கல்லூரிதான் அதுவும் சென்னையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாவட்டத் தலைநகர்களில் எல்லாம் திரைப்படக் கல்லூரி அமைக்கவேண்டும் என்றால் 50 கோடி ரூபாய் ஒரு கல்லூரிக்குத் தேவைப்படும். 22 மாவட்டங்களிலும் அவ்வாறு அமைத்தால் 1100 கோடி ரூபாய் தேவைப்படும். ஆகவே அந்த எண்ணம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 195, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.